
1

## சிறப்பு வரைபடம் 1.4

### உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக் கொடுகடனின் தவணைவாரியிலான பரம்பல்

(உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மாதாந்த அளவீட்டின் அடிப்படையில்)

**2025இல் தவணைவாரியிலான கொடுகடன் விரிவாக்கம் (ரூ.பில்)**




குறிப்பு:
1. ஒவ்வொரு துறைக்கும் உரிய வருடாந்த விரிவாக்கம் அதன் மொத்த விரிவாக்கத்தில் உள்ள பங்குடன் சேர்த்து அடைப்புக்குறியினுள் காட்டப்பட்டுள்ளது.
2. 2025ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநின்ற தனியார் துறை கொடுகடனின் துறைவாரியான விநியோகம் பின்வருமாறு: விவசாயம் (9%), கைத்தொழில் (38%), சேவைகள் (31%) மற்றும் தனிநபர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (22%). அதே காலகட்டத்தில் குறுங்கால கடன்கள் (42%), நடுத்தர கால கடன்கள் (22%) மற்றும் நீண்ட கால கடன்கள் (36%) என்ற தவணைவாரியிலான பரம்பலைக் கொண்டுள்ளது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2025இல் தனியார் துறைக் கொடுகடன் விரிவாக்கமானது பெரும்பாலும் பரந்த அடிப்படையிலானதாக காணப்பட்டது. பணிகள் துறை மற்றும் தனிநபர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வடிவிலான கொடுகடன் விரிவாக்கத்தின் பெரும்பகுதியானது குறுங்கால கடன்வழங்கலாக அமைந்தது. இது பணி சார்ந்த தொழில்களின் தொழிற்படு மூலதன நோக்கங்களுக்கான அதிகரித்த நிதித் தேவைப்பாடுகளை பிரதிபலிக்கின்றது. மேலும், நுகர்விற்கு ஆதரவளிப்பதற்கும் குறுங்கால திரவத்தன்மைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்கும் குடியிருப்பு கடன்பெறுகை அதிகரித்தது.

இதற்கு மாறாக, பொருளாதார நெருக்கடியினைத் தொடர்ந்து குறிப்பாக மீட்சி கட்டத்தின் போது, கைத்தொழில் துறையின் கொடுகடன் விரிவாக்கமானது பெரும்பாலும் நீண்டகால கடன்களினால் உந்தப்பட்டு, மூலதன முதலீடு மற்றும் வியாபார விரிவாக்கச் செயற்றிட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியத்தைச் சுட்டிக்காட்டியது.

அதேவேளை, வேளாண்மை உற்பத்தி செயன்முறையின் பருவகால தன்மையையும் விதைகள் போன்ற உள்ளீடுகள், வளமாக்கி, தொழிலாளர் மற்றும் ஏனைய பயர்செய்கையுடன் தொடர்புடைய செலவுகள் என்பனவற்றுக்கான நிதியளித்தல் தேவைகளை பிரதிபலித்து, வேளாண்மை மற்றும் மீன்பிடி துறையில் கொடுகடன் விரிவாக்கமானது பெரும்பாலும் குறுகிய காலமாகவே காணப்பட்டது.